சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.18/2022

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடாச்சலம் | வயது | 71 |
| த/பெ | கோவிந்தப்பன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிறுமுகை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | ஒர்க்ஷாப் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

எனது முந்தைய குறுக்கு விசாரணையில் நஞ்சுண்ட கவுடருக்கு பாத்தியப்பட்ட சொத்து யாருக்கு பிரிந்து போனது என தெரியாது என குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரி தான். குடும்ப சொத்து விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பா இரண்டாவது திருமணம் செய்த பின்னர் அவரது வகையில் எங்களுக்கு எந்த சொத்தும் வரவில்லை. நஞ்சுண்ட கவுடரின் சொத்து 1ம் பிரதிவாதியான ஜி. ரங்கசாமி என்பவருக்கு சென்றது என்றால் சரி தான். நான் பிறப்பதற்கு முன்னரே 1947 ம் ஆண்டில் என் தாத்தா சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்து விட்டார். 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரி தான். 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்தை அவர் மட்டும் வைத்து உள்ளாரா அல்லது பிரித்து கொடுத்துள்ளாரா என்றால் அவர் மட்டும் தான் வைத்து உள்ளார். 1ம் பிரதிவாதிக்கு வந்த சொத்தில் நான் பாகம் எதுவும் கேட்கவில்லை. அந்த சொத்துக்கள் தற்போது யார் கையில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியின் கையில் உள்ளது. அதில் பாகம் வேண்டும் என நான் கேட்கவில்லை என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி அந்த சொத்துக்களை விற்று விட்டாரா என்றால் அவரது மகனான முத்துக்குமார் என்பவருக்கு எழுதி வைத்து விட்டார். 1ம் பிரதிவாதி அவரது மகனுக்கு சொத்துக்களை கொடுத்த பின்னரும் நான் அதில் பாகம் கேட்டேன் என்றால்

இல்லை. 1ம் பிரதிவாதி சொத்துக்களை அவரது மகனுக்கு சொத்துக்களை எழுதி வைத்த பின்னர் நான் எனது மகன் மற்றும் எனது மகள் ஆகியோர் சொத்துக்களில் பங்கு கோரி 1ம் பிரதிவாதியிடம் பிரச்சினை செய்தோம் என்றால் இல்லை. அப்போது நான், எனது மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் 1ம் பிரதிவாதியின் மகன் முத்துக்குமாரிடம் வங்கியின் மூலமாக பணம் பெற்றுக் கொண்டோம் என்றால் இல்லை. எனக்கு கனரா வங்கி சிறுமுகை கிளையில் கணக்கு உள்ளது. எனது வங்கி கணக்கில் அவ்வாறு பணம் பெற்றுக் கொண்டதற்கான குறிப்பு உள்ளது என்றால் சரி யல்ல. எனது மகன் மற்றும் மகளுக்கும் அதே போல அவரது வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்டு உள்ளது என்றால் சரி யல்ல. என்னிடம் காட்டப்படும் 17.12.2021 ஆம் தேதிய சம்மத ஆவணத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம் என்றால் சரி தான். ( அந்த ஆவணம் புகைப்பட நகல் என்பதால் அதனை குறியீடு செய்ய இயலாது). அந்த ஆவணத்தை முத்துக்குமார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எழுதி கொடுத்து உள்ளேன் என்றால் முத்துக்குமார் சொத்துக்களை விற்பனை செய்ய இருப்பதாகவும் என்னிடம் கையெழுத்து கேட்டதால் நான் கையெழுத்து போட்டேன். அதே போல தான் எனது மகன் மற்றும் மகள் கையெழுத்து போட்டு உள்ளார்கள் என்றால் சரி தான். எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் வங்கியின் மூலமாக தொகை செலுத்தப்பட்டு விட்டது என்றால் சரி யல்ல. வங்கி மூலமாக நான் பணம் பெற்றுக் கொண்டதை சாட்சியாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரி தான். அந்த ஆவணத்தில் மொத்தம் 13 பேர் கையொப்பம் செய்து உள்ளார்கள் என்றால் அந்த ஆவணத்தில் என்ன உள்ளது என்று தெரியாது. ஒரு நாள் முத்துக்குமார் வந்து என்னிடம் அழுது கொண்டு கையெழுத்து போடுமாறு கூறியதால் கையெழுத்து போட்டோம். அந்த ஆவணம் எழுதி கொடுப்பதற்கு எனது மகனையும் மகளையும் நான் தான் அழைத்து சென்றேன் என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி அவரது மகன் முத்துக்குமாருக்கு எழுதி கொடுத்த பின்னர் நாங்கள் பிரச்சினை செய்து பணம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரி யல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களையும் தனது மகனுக்கு எழுதி கொடுத்து

விட்டார் என்றால் இல்லை. தாவா சொத்து மற்றும் பக்கத்தில் உள்ள இதர சொத்துக்களையும் சேர்த்து எனது அப்பாவும் தேப்பைய கவுடரும் ஒரே பத்திரமாக எழுதி கொண்டார்கள் என்றால் சரி யல்ல. தேப்பைய கவுடரும் எனது தாயார் நஞ்சம்மாளும் சேர்ந்து தான் வாங்கினார்கள். எனது தாயார் நஞ்சம்மாளுக்கு சொத்துக்களை வாங்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரி யல்ல. பெயரளவிற்கு தான் எனது அம்மா பெயருக்கு எழுதி வாங்கப்பட்டது என்றால் சரி யல்ல. ஈ.ஜி. ஈஸ்வரன், ஈஜி காளியப்பன், மற்றும் ஈ.ஜி தேசியப்பன் ஆகியோர்கள் எனக்கு என்ன உறவு என்றால் சொந்த தாய்மாமாக்கள். தாவா சொத்து எனது தந்தை கோவிந்தப்ப கவுடரும் தேப்பைய கவுடரும் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்றால் சரி யல்ல. அதனால் நான் என்னுடைய எதிர் வழக்குரையில் கூறியவாறு எனது தாயாருக்கு அவரது சகோதரர்களும், பெற்றோர்களும் சேர்ந்து வாங்கிக் கொடுத்த சொத்து என்று பொய்யாக கூறி உள்ளேன் என்றால் சரி யல்ல. கோவிந்தப்ப கவுடர் உயிரோடு இருந்த வரை தாவா சொத்தை அவர் தான் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்து அவரது இறப்பிற்கு பின்னர் தான் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரி தான். அதனால் நஞ்சம்மாளின் தனிப்பட்ட சொத்து என கூறுவது பொய் என்றால் சரி யல்ல. எனது அப்பா எனது அம்மாவிற்கு பெயரளவிற்கு எழுதி வைத்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. தாவா சொத்திற்கான மின் இணைப்பு என் தகப்பனார் பெயரில் தான் உள்ளது என்றால் சரி யல்ல. என் பெயரில் உள்ளது. என் பெயருக்கு முன்னர் எனது தகப்பனார் பெயரில் தான் இருந்தது என்றால் சரி தான். எனது தகப்பனார் பெயரில் சுயமாக வாங்கியதால் தான் மின் இணைப்பு அவர் பெயரில் இருந்தது என்றால் 1962 ல் எனது அப்பா குடும்ப தலைவர் என்பதால் அவரது பெயரில் மின் இணைப்பு இருந்தது. எனது தாயாருக்கு பெயரளவிற்கு தான் பத்திரம் இருந்ததால் தான் எனது தகப்பனார் பெயருக்கு மின் இணைப்பு இருந்தது என்றால் சரி யல்ல. நான் என்னுடைய 25 வயதுக்கு மேல் தான் சம்பாதித்தேன் என்றால் 17 வயதிலேயே சம்பாதிக்க ஆரம்பித்தேன். நான் 17 வயதில் சம்பாதித்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல.

நான் எஸ் எஸ் எல் சி படித்து உள்ளேன். அதற்கு முன்னர் ஐ டி ஐ எதுவும் படித்தேனா என்றால் படிக்கவில்லை. குடும்ப சூழ்நிலையின் காரணமாக மேற்கொண்டு படிக்க வில்லை. நான் 1951 ம் ஆண்டில் பிறந்தேன். என் சகோதரி ருக்மணி 1949 ல் பிறந்தார் என்றால் சரி தான். நான் 1984 ம் ஆண்டு வாக்கில் சிறுமுகையில் உள்ள விஸ்கோஸ் ஆலையில் ஒப்பந்ததாரராக பணி புரிந்து வந்தேன் என்றால் சரி தான். 1984 ம் ஆண்டு வாக்கில் எனது சகோதரி ருக்மணிக்கு 33 வயது இருக்கும் என்றால் சரி தான். எனது சகோதரி ருக்மணிக்கு 1974 ம் ஆண்டில் திருமணம் நடந்தது என்றால் எனக்கு நினைவு இல்லை. என் சகோதரி ருக்மணிக்கு எனது தகப்பனார் தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் நான் சம்பாதித்து தான் என் குடும்பத்தை காப்பாற்றி எனது அக்காவிற்கும் திருமணம் செய்து வைத்தேன். 1974 ம் ஆண்டில் நான் சம்பாதிக்கவே இல்லை என்றும் ஆகவே எனது அக்காவிற்கு எனது சம்பாத்தியத்தில் திருமணம் செய்து வைத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. 3 ம் பிரதிவாதியின் தகப்பனாரும் எனது உடன் பிறந்த தம்பியும் 2 ம் வாதியின் கணவருமான ஜி. சதாசிவம் என்பவர் சவுதி அரேபியாவில் வேலை செய்து வந்தார் என்றால் சரி தான். அவரை நான் தான் செலவு செய்து அனுப்பி வைத்தேன். அவர் சுமார் 10 ஆண்டுகளாக அங்கு வேலை செய்து இருப்பார். நான் அவரை வேலைக்கு அனுப்பவில்லை என்றும் அவராக சென்றார் என்றால் சரி யல்ல. சவுதி அரேபியாவில் சதாசிவத்திற்கு நல்ல வருமானம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர் வெளிநாட்டில் இருக்கும்போது தான் அவருக்கு திருமணம் வெளிநாட்டில் வைத்தே நடந்தது என்றால் சரி யல்ல. அவர் வெளி நாட்டில் வேலை செய்து வந்த போது மேட்டுப்பாளையத்தில் வைத்து தான் திருமணம் நடந்தது. அவர் திருமணம் முடிந்ததும் வெளி நாடு சென்று விட்டார் என்றால் சரி தான். அவரது சொந்த வருமானத்தில் தான் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரி தான். அவர் திருமணம் முடிந்து எத்தனை ஆண்டுகள் வெளி நாட்டில் இருந்தார் என்றால் அவர் திடீரென வருவார் போவார். அவருக்கு நிறைய கெட்ட பழக்கம் இருந்ததால் நான் அது பற்றி கேட்டதில்லை. வெளிநாட்டில் எனது தம்பியும் அவரது

மனைவியும் வேலை செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் வாதி கிருத்திகா வெளி நாட்டில் தான் பிறந்தார் என்றால் சரி தான். சதாசிவமும் அவரது மனைவி மற்றும் மகள் எத்தனை ஆண்டுகள் சவுதி அரேபியாவில் குடியிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அவர்களுக்கு நல்ல வருமானம் இருந்ததால் ரொம்ப வருடங்களாக சவுதி அரேபியாவில் இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அவர்கள் மூவரும் வெளி நாட்டில் ஒற்றுமையாக தான் இருந்தார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனக்கு விஸ்கோஸ் தொழிற்சாலை ஒப்பந்தம் மூலமாக கிடைத்த வருமானத்தை விட எனது தம்பி சதாசிவத்திற்கு வெளி நாட்டில் அதிக வருமானம் வந்தது என்றால் சரி யல்ல. எனது தம்பியும் அவரது மனைவி மற்றும் மகள் வெளிநாட்டில் இருந்து வந்ததும் தாவா சொத்தில் தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் இல்லை. வெளிநாட்டில் இருந்து வந்ததும் எனது தம்பி சிறுமுகையில் உள்ள கூட்டுறவு நகர வங்கியில் வேலை செய்து வந்தார் என்றால் அந்த வங்கியில் இரவு காவலராக வேலை செய்து வந்தார். தாவா சொத்துக்கும் வங்கிக்கும் இடையே 250 மீட்டர் தான் இருக்கும் என்றால் அரை கிலோ மீட்டர் இருக்கும். தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு அந்த வங்கியில் வேலை செய்து வந்தார் என்றால் சரி யல்ல. எனது தம்பி அவரது சுய சம்பாத்தியத்தில் தான் சிகிச்சை பெற்றுக் கொண்டார் என்றும் அவரது சிகிக்சைக்கு நான் உதவி செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரி யல்ல. எனது தம்பி சதாசிவம் தாவா சொத்தில் வைத்து தான் இறந்தார் என்றால் சரி யல்ல. எனது தம்பி சதாசிவம் இறந்த துக்கத்தில் இருக்கும் போது நான் சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை எடுத்து சென்று விட்டேன் என்றால் 2001ம் ஆண்டில் இருந்தே சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்னிடம் தான் உள்ளது . 3ம் வாதி கிருத்திகா தனது 8 வயது வரை வெளிநாட்டில் தான் படித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தம்பி வெளி நாட்டில் இருந்து சம்பாதித்த பணத்தை எனது அப்பாவிடமும் எனது அம்மாவிடமும் அனுப்பி வைத்து அவர்களை நல்ல முறையில் எனது தம்பி பராமரித்து வந்தார் என்றால் பணம் அனுப்பினாரா என்று எனக்கு தெரியாது. ஆனால் எனது

பெற்றோர்களை நான் தான் பராமரித்தேன். எனது தம்பி வெளிநாட்டில் இருந்து திரும்பியதும் எனது பெற்றோர்களுடன் கூட்டாக தான் தாவா சொத்தில் வசித்து வந்தார் என்றால் இல்லை. எனது அப்பா கோவிந்தப்ப கவுடர் வேறு நபருக்கு சொத்தை விற்க முயற்சித்த போது எனது தம்பி மற்றும் அவரது மனைவி ஆகியோர்கள் வெளி நாட்டில் சம்பாதித்த பணத்தை வைத்து அந்த சொத்தை கிரையத்திற்கு வாங்கினார்கள் என்றால் சரி யல்ல. அந்த சொத்து தான் பி.வா.சா.ஆ. 2 ல் உள்ள சொத்து என்றால் சரி தான். அந்த சொத்திற்கு நானும் பாதி பணம் கொடுத்து உள்ளேன். ஆனால் எனக்கு தெரியாமலேயே விற்று விட்டார்கள். நான் பணம் கொடுத்தற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. எனது தாயாருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரி தான். அதை வைத்து எனது தாயாரிடம் மோசடியாக எழுதி வாங்கி கொண்டேன் என்றால் சரி யல்ல. எனது தாயார் எனக்கு ஆவணம் எழுதி கொடுப்பதற்கு அவசியம் இல்லை என்றால் சரி யல்ல. 2 ம் பிரதிவாதியின் மகன் செந்தில்குமாருக்கும் எனக்கும் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரி தான். பி.வா.சா.ஆ 10 ல் செந்தில்குமார் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரி யல்ல. அந்த சாட்சி கையெழுத்துக்களை நான் தான் மோசடியாக போட்டேன் என்றால் சரி யல்ல. அந்த சாட்சி கையெழுத்து செந்தில்குமாருடையது என நிரூபிக்க சாட்சியை விசாரிக்க போகிறேனா என்றால் அவசியம் இல்லை. வேண்டும் என்றால் நீங்கள் விசாரியுங்கள். அந்த பத்திரத்தில் உள்ளது செந்தில்குமாரின் கையொப்பம் இல்லை என்பதால் தான் அவரை விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. செந்தில்குமாரை வாதி தரப்பில் விசாரிக்க எனக்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்றால் இல்லை. நான் சிறுமுகை வ.உ.சி நகரில் எந்த ஆண்டு காலியிடம் வாங்கி எந்த ஆண்டு வீடு கட்டினேன் என்றால் 1989 ல் வாங்கி அந்த ஆண்டே சுமார் 6 மாதங்கள் கழித்து வீடு கட்டினேன். எனது தாயார் நஞ்சம்மாள் தாவா சொத்தில் நல்ல முறையில் குடியிருந்து வரும்போது அவர் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரி யல்ல. எனது தாயார் இறக்கும் வரை

அவரை வாதிகள் நல்ல முறையில் கவனித்து கொண்டார்கள் என்றால் சரி யல்ல. பி.வா.சா.ஆ. 7 பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரி தான். அதனை நான் மோசடியாக உற்பத்தி செய்து உள்ளேன் என்றால் சரி யல்ல. அந்த ஆவணம் 30.01.2001 அன்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை யார் எழுதிய என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த ஆவணத்திற்கான முத்திரைத்தாள் 31.01.2001 அன்று வாங்கப்பட்டுள்ளது என்றால் சரி தான். நான் அந்த பத்திரத்தை மோசடியாக உற்பத்தி செய்ததால் தான் முத்திரைத் தாளுக்கு முன் கூட்டியே பி.வா.சா.7 ஐ எழுதி உள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் பி.வா.சா. 7 ற்கான முத்திரைத்தாள் செல்லாது என்றால் சரி யல்ல. பி.வா.சா. 7 ல் எனது தாயார் யாரிடம் கடன் வாங்கியதாக கூறப்பட்டுள்ளது என்றால் காணியப்பன் என்பவரிடம் கடன் வாங்கியதாக கூறப்பட்டுள்ளது. காணியப்பன் எனது தாயாரின் உடன் பிறந்த தம்பி என்றால் சரி தான். எனது தாயார் எந்த காலத்திலும் கடன் வாங்கவில்லை என்றும் அவரது சகோதரரிடம் கடன் வாங்கியதாக மோசடியாக ஒரு ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. பி.வா.சா.7 வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி யல்ல. பி.வா.சா. 7 மற்றும் 10 ஆகியவை மோசடியாக மற்றும் போலியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரி யல்ல. இந்த விபரங்கள் வாதிகளுக்கு தெரியும் என எதிர் வழக்குரையில் பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி யல்ல. பி.வா.சா.ஆ. 7 ஆவணத்திலுள்ள கடனுக்காக பி.வா.சா.ஆ. 10 ல் கண்டுள்ள ஆவணத்தை எனது தாயார் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரி யல்ல. கடனுக்காக பி.வா.சா.ஆ. 7 எழுதி கொடுக்கப்பட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. முத்துக்குமாரிடம் இருந்து நானும் கோவிந்தப்ப கவுடரின் மற்ற வாரிசுகள் மொத்தம் 5 பேர் சேர்ந்து பணம் பெற்றுக் கொண்டோம் என்றால் சரி யல்ல. 1ம் பிரதிவாதியின் மகனுக்கு சம்மத பத்திரம் எழுதி கொடுத்து விட்டு அதன் மறு பயனையும் பெற்றுக் கொண்டு தற்போது பணமே வாங்கவில்லை என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி யல்ல. இது

சம்பந்தமாக எனது மகன் மற்றும் மகளை விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. எனது மகனையும் மகளையும் விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் அவர்களை விசாரிக்க வில்லை என்றால் சரி யல்ல. நான் முழு சொத்தையும் அபகரிக்க வேண்டும் என்பதற்காக தான் பி.வா.சா.ஆ. 7 மற்றும் 10 ஐ தயார் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் பிராதில் கோரியவாறு தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரி யல்ல.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

Sd/-G.Gengaraj,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.